# ஆண்டவரின் திருமுழுக்குப் பெருவிழா

## மூன்றாம் ஆண்டு 13-01-2013

## ”தந்தையைப் பூரிக்கச் செய்வோம்!

### திருப்பலி முன்னுரை:

**நா**ளை பொங்கலோ பொங்கல் என்று தமிழ்கூறும் நல்லுலகெங்கும் மகிழ்ந்து நிற்கும், அல்லது மகிழ்ந்திருக்க விரும்பும் நன்னாளாம் அறுவடை விழா. பொங்கல் விழா. எனவே எல்லாவற்றிற்குமாக பொங்கலிட்டு நம் மகிழ்ச்சி பொங்கி வருகையில் பொங்கலோ பொங்கல் என்று குலவையிட்டு மகிழ்வோம்.

**இ**றை இயேசுவில் ப்ரியமுள்ள அருட்தந்தை! (அருட்தந்தையர்களே) மற்றும் சகோதரர்களே சகோதரிகளே நண்பர்களே, பணிவாழ்வை தொடங்குமுன் கிறிஸ்து திருமுழுக்கு பெற்றார் என்பதனை விழாவாக கொண்டாட இன்று திருச்சபை நம்மை அழைக்கின்றது. இன்றைய இயேசுவின் திருமுழுக்கு திருவிழாவுடன் கிறிஸ்துபிறப்பு காலம் முடிவுக்கு வருகின்றது.

”மகன் தந்தைக்காற்றும் நன்றி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்” என்னும் அழகிய குறள்மொழியின் பொருள்: இப்படிப்பட்ட மகளை, மகனைப் பெறுவதற்கு, இவர் தந்தை என்ன தவம் செய்தாரோ எனப் பிறர் போற்றும் அளவுக்கு வாழ்வதே ஒவ்வொரு மகனும், மகளும் தமது பெற்றோருக்கு ஆற்றும் கடமை, நன்றி.

**இ**யேசு அப்படிப்பட்ட ஒரு மகனாக இருந்தார் என நற்செய்தி நூல் சான்று பகர்கிறது. இயேசு தம் பெற்றோருக்குப் பணிந்து நடந்தார் என்றும், ”கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்” எனவும் லூக்கா நற்செய்தியில் வாசிக்கிறோம்.

**இ**ன்றைய நற்செய்தி வாசகத்திலோ, வானகத் தந்தையே விண்ணிலிருந்து ”என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்” என்று விண்ணிலிருந்து பறைசாற்றினார் எனக் காண்கிறோம். தமது வளர்ப்புப் பெற்றோரையும், விண்ணகத் தந்தையையும் மதித்து, அவர்களை மகிழ்விக்கச் செய்வதே தமது கடமை, மகிழ்ச்சி என்னும் உணர்வோடு எப்போதும் சிந்தித்து, செயல்பட்டார் ஆண்டவர் இயேசு. நாமும் நம்மை ஈன்றெடுத்த நம் பெற்றோரைப் பெருமைப்படுத்தும் விதத்தில் வாழ உறுதிபூணுவோம். நமக்கு உயிர் தந்து, நம்மை இருக்கவும், இயங்கவும், வாழவும் செய்யும் வானகத் தந்தை மகிழ்ச்சி அடையும்படியாக வாழவும் உறுதிகொள்வோம். நாம் பெற்ற திருமுழுக்கை நினைத்து நம் மீது பொழியப்பட்டுள்ள ஆவியின் வரங்களை கனிகளை முழுமையாக பயன்படுத்தி வாழ வரம் கேட்டு மன்றாடுவோம்.

## முதல் வாசகம்

குரலொளி ஒன்று முழங்குகின்றது: பாலைநிலத்தில் ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள

ஏசாயா நூலிலிருந்து வாசகம் 40:1-5, 9-11

1 ஆறுதல் கூறுங்கள்: என் மக்களுக்குக் கனிமொழி கூறுங்கள் என்கிறார் உங்கள் கடவுள்.2
எருசலேமிடம் இனிமையாய்ப் பேசி, உரத்த குரலில் அவளுக்குச் சொல்லுங்கள்: அவள் போராட்டம்
நின்றுவிட்டது: அவள் குற்றம் மன்னிக்கப்பட்டது: அவள் தன் பாவங்கள் அனைத்திற்காகவும் ஆண்டவர்
கையில் இருமடங்கு தண்டனை பெற்றுவிட்டாள்.3 குரலொளி ஒன்று முழங்குகின்றது: பாலைநிலத்தில்
ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்: பாழ்நிலத்தில் நம் கடவுளுக்காக நெடுஞ்சாலை
ஒன்றைச் சீராக்குங்கள்.4 பள்ளத்தாக்கு எல்லாம் நிரப்பப்படும்: மலை, குன்று யாவும் தாழ்த்தப்படும்:
கோணலானது நேராக்கப்படும்: கரடு முரடானவை சமதளமாக்கப்படும்.5 ஆண்டவரின் மாட்சி
வெளிப்படுத்தப்படும்: மானிடர் அனைவரும் ஒருங்கே இதைக் காண்பர்: ஆண்டவர்தாமே இதை
மொழிந்தார். 9 சீயோனே! நற்செசய்தி தருபவளே, உயர்மலைமேல் நின்றுகொள்! எருசலேமே!
நற்செய்தி உரைப்பவரே! உன் குரலை எழுப்பு, அஞ்சாதே! "இதோ உன் கடவுள்" என்று யூதா
நகர்களிடம் முழங்கு!10 இதோ என் தலைவராகிய ஆண்டவர் ஆற்றலுடன் வருகின்றார்: அவர்
ஆற்றலோடு ஆட்சி புரிய இருக்கிறார். அவர்தம் வெற்றிப் பரிசைத் தம்முடன் எடுத்து வருகின்றார்:
அவர் வென்றவை அவர்முன் செல்கின்றன.11 ஆயனைப்போல் தம்மந்தையை அவர் மேய்ப்பார்:
ஆட்டுக்குட்டிகளைத் தம் கையால் ஒன்று சேர்ப்பார்: அவற்றைத் தம் தோளில் தூக்கிச் சுமப்பார்:
சினையாடுகளைக் கவனத்துடன் நடத்திச் செல்வார்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
- இறைவா உமக்கு நன்றி

## பதிலுரைப் பாடல்:

பல்லவி: என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! பல்லவி:

திருப்பாடல்கள் 104:1-4, 24-25, 27-30

1 1 என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் கடவுளாகிய ஆண்டவரே! நீர் எத்துணை
மேன்மைமிக்கவர்! நீர் மாண்பையும் மாட்சியையும் அணிந்துள்ளவர். 2 பேரொளியை ஆடையென
அணிந்துள்ளவர் வான்வெளியைக் கூடாரமென விரித்துள்ளவர் பல்லவி:

3 நீர்த்திரள்மீது உமது உறைவிடத்தின் அடித்தளத்தை அமைத்துள்ளவர் கார் முகில்களைத்
தேராகக் கொண்டுள்ளவர் காற்றின் இறக்கைகளில் பவனி வருகின்றனவர்! 4 காற்றுகளை உம்
தூதராய் நியமித்துள்ளவர் தீப்பிழம்புகளை உம் பணியாளராய்க் கொண்டுள்ளவர். பல்லவி:

24 ஆண்டவரே! உம் வேலைப்பாடுகள் எத்தணை எத்தணை! நீர் அனைத்தையும் ஞானத்தோடு
செய்துள்ளீர்! பூவுலகம் உம் படைப்புகளால் நிறைந்துள்ளது. 25 இதோ! பரந்து விரிந்து
கிடக்கும் கடல்கள் அவற்றில் சிறியனவும் பெரியனவுமாக வாழும் உயிரினங்கள் எண்ணிறந்தன.
பல்லவி:

27 தக்க காலத்தில் நீர் உணவளிப்பீர் என்று இவையெல்லாம் உம்மையே நம்பியிருக்கின்றன. 28
நீர் கொடுக்க, அவை சேகரித்துக் கொள்கின்றன் நீர் உமது கையைத் திறக்க, அவை
நலன்களால் நிறைவுறுகின்றன. பல்லவி:

29 நீர் உமது முகத்தை மறைக்க, அவை திகிலடையும் நீர் அவற்றின் மூச்சை நிறுத்திவிட்டால்,
அவை மாண்டு மறுபடியும் புழுதிக்கே திரும்பும். 30 உமது ஆவியை நீர் அனுப்ப, அவை
படைக்கப்பெறுகின்றன் மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர். பல்லவி:

## இரண்டாம் வாசகம்:

நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாகத் தூய ஆவியை நம்மீது நிறைவாகப் பொழிந்தார்

தீத்துவுக்கு எழுதிய நிருபத்தில் இருந்து வாசகம்

11 ஏனெனில் மனிதர் அனைவருக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது.12 நாம் இறைப்பற்றின்மையையும் உலகுசார்ந்த தீய நாட்டங்களையும் மறுத்துக் கட்டுப்பாட்டுடனும் நேர்மையுடனும் இறைப்பற்றுடனும் இம்மையில் வாழ இவ்வருளால் பயிற்சி பெறுகிறோம்.13 மகிழ்ச்சியோடு எதிர்நோக்கியிருப்பது நிறைவேறும் எனக் காத்திருக்கிறோம். நம் பெருமைமிக்க கடவுளும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படப்போகிறது.14 அவர் நம்மை எல்லா நெறிகேடுகளிலிருந்தும் மீட்டு, நற்செயல்களில் ஆர்வமுள்ள தமக்குரிய மக்களாகத் தூய்மைப்படுத்தத் தம்மையே ஒப்படைத்தார்.4 நம் மீட்பராம் கடவுளின் நன்மையும் மனித நேயமும் வெளிப்பட்டபோது,5 நாம் செய்த அறச்செயல்களை முன்னிட்டு அல்ல, மாறாகத் தம் இரக்கத்தை முன்னிட்டு, புதுப் பிறப்பு அளிக்கும் நீரினாலும் புதுப்பிக்கும் தூய ஆவியாலும் கடவுள் நம்மை மீட்டார்.6 அவர் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாகத் தூய ஆவியை நம்மீது நிறைவாகப் பொழிந்தார்.7 நாம் அவரது அருளால் அவருக்கு ஏற்புடையவர்களாகி, நாம் எதிர்நோக்கி இருக்கும் நிலைவாழ்வை உரிமைப்பேறாகப் பெறும் பொருட்டே இவ்வாறு செய்தார்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு
- இறைவா உமக்கு நன்றி

## நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

அல்லேலூயா, அல்லேலூயா!என் அன்பார்ந்த மகன் நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகிறேன்அல்லேலூயா

## நற்செய்தி வாசகம்:

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 3:15-16,21-22

15 அக்காலத்தில் மக்கள் மீட்பரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருவேளை யோவான் மெசியாவாக இருப்பாரோ என்று எல்லாரும் தங்களுக்குள் எண்ணிக்கொண்டிருந்தார்கள்.16 யோவான் அவர்கள் அனைவரையும் பார்த்து, “ நான் தண்ணீரால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கிறேன் ஆனால் என்னைவிட வலிமைமிக்க ஒருவர் வருகிறார். அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை. அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார். 21 மக்களெல்லாரும் திருமுழுக்குப் பெறும் வேளையில் இயேசுவும் திருமுழுக்குப் பெற்று, இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தபோது வானம் திறந்தது.22 தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர்மீது இறங்கியது. அப்பொழுது, “ என் அன்பார்ந்த மகன் நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகிறேன் “ என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
- கிறிஸ்துவே உமக்கு புகழ்.

# இறைமக்களின் வேண்டல்கள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

அருளின் ஊற்றே இறைவா!

எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் தங்களின் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து, இறைவிருப்பத்தின்படி நடந்து மக்களை தூய ஆவியின் வழியில் நடத்த இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

உலகின் ஒளியாக உம்மை வெளிப்படுத்திய இயேசுவே,

திருமுழுக்கினால் தேர்வு செய்யப்பட்ட நாங்கள், அதனால் பெற்ற கடமைகளையும், உரிமைகளையும் பயன்னபடுத்தி பொறுப்புள்ள வாழ்வு வாழ வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

திருக்காட்சி நிகழ்வின் வழியாக உம் அன்பை எல்லா மக்களக்கும் வெளிப்படுத்திய இறைவா!

ஜென்மபாவம் கழுவப்பட்ட நாங்கள், மண்ணுலகில் செய்யும் பாவங்களால் கறைப்பட்டு இருக்கிறோம் என்பதனை உணர்ந்து, பாவமன்னிப்பு கூறித்து அச்சம் கெரண்டு ஒப்புரவின் வழி எங்களை தூய்மையாக்கிக் கொள்ள வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

நிறைவாழ்வை வாக்களிக்கும் தந்தையே!

உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள், எம் சொந்த வாழ்வின் மனமாற்றத்திற்கான வழிகளைக் கண்டடைந்து, எம்மை ஆன்மீகத்திலும், அருள் வாழ்விலும் புதுப்பித்துக் கொண்டு, நீர் மகிழ்வோடும், விருப்போடும் எம்மில் வந்து தங்க எம்மைத் தயார்படுத்த வேண்டிய ஆற்றலை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

எங்களை எப்பொழுதும் ஆசீர்வதித்துக்கொண்டிருக்கும் அன்புத் தந்தையே!

நாம் பெற்ற திருமுழுக்கை நினைத்து நம் மீது பொழியப்பட்டுள்ள ஆவியின் வரங்களை கனிகளை முழுமையாக பயன்படுத்தி வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

எல்லாம் வல்ல அன்புத்தந்தையே இறைவா,

எங்கள் பங்கு மக்கள் அனைவரும் திருமுழுக்கில் கொடுத்த வாக்குறுதிகளை புதுப்பித்து இறுதிவரை இறையன்பிலும் பிறரன்பிலும் அமைதியிலும் நிலைத்து வாழ இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## இன்றைய சிந்தனை:

“என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்“

இயேசு ஏன் திருமுழுக்குப் பெற்றார் என்னும் கேள்வி மக்களின் மனத்தில் குழப்பத்தை உருவாக்கக் கூடும். தொடக்க காலத் திருச்சபையிலும் இக்கேள்வி எழுந்ததுண்டு. நற்செய்தி நூல்கள் நான்கும் இயேசு திருமுழுக்குப் பெற்றதைக் குறிப்பிடுகின்றன (காண்க: மத் 3:13-17 மாற் 1:9-11 யோவா 1:32-34). என்றாலும், பாவ மன்னிப்புப் பெறுவதற்காக வழங்கப்பட்ட திருமுழுக்கை இயேசுவும் பெற்றுக்கொண்டதால் அவரிடத்தில் பாவம் குடிகொண்டிருந்ததா, அவர் கடவுளின் மகனாக நம்மிடையே வந்ததால் அவரிடம் பாவம் உண்டு என நாம் கருதுவது சரியல்லவே என்றெல்லாம் ஐயப்பாடு அந்நாளில் எழுந்ததுண்டு. இயேசு கடவுளோடு ஒன்றித்திருந்தார் என்பதால் அவரிடத்தில் பாவம் குடிகொண்டிருக்கவில்லை. கடவுளின் அன்பிலிருந்து அவர் ஒருநாளும் பிரிந்ததில்லை. என்றாலும், இயேசு நம்மைப் போல மனிதராகப் பிறந்தவர் நம்மோடு தம்மை முழுமையாக ஒன்றித்துக்கொண்டவர். எனவே, பாவம் தவிர அனைத்திலும் அவர் நமக்குச் சமமானார். ஆக, அவர் திருமுழுக்குப் பெற்றது கடவுளின் திருவுளத்திற்கு ஏற்ப நடந்த ஒரு நிகழ்ச்சி என்பதை நற்செய்தி நூல்கள் தெளிவுபடுத்துகின்றன.

இயேசு திருமுழுக்குப் பெற்றபோது வானிலிருந்து வந்த குரல் ஒரு பேருண்மையை வெளிப்படுத்தியது. “இயேசு கடவுளின் அன்புமிக்க மகன் கடவுள் அவரைக் குறித்து மகிழ்ச்சியடைகிறார்“ (காண்க: மத் 3:17 மாற் 1:11 லூக் 3:22 யோவா 1:33-34). நாம் பெறுகின்ற திருமுழுக்கு நம்மைக் கடவுளின் பிள்ளைகளாக மாற்றுகிறது. இதனால், நீரினால் முறையாகத் திருமுழுக்குப் பெறாத ஆயிரக்கணக்கான மக்கள் கடவுளின் பிள்ளைகள் அல்ல என்று பொருளாகாது. மாறாக, திருமுழுக்கின் வழியாக நாம் கடவுளின் பிள்ளைகள் என்னும் உண்மை வெளிப்படையாக அறிக்கையிடப்படுகிறது் நாம் கிறிஸ்துவின் சீடர் என்னும் தகுதி வழங்கப்பட்டு, பறைசாற்றப்படுகிறது. அதன் அடிப்படையில் நாம் புதிய மனிதர்களாக, புதுப்பிறப்பு அடைந்தவர்களாக வாழ்ந்திட அழைக்கப்படுகிறோம். கிறிஸ்தவ வாழ்வு என்பது திருமுழுக்கின் நீட்சி என நாம் கூறலாம்.

### மன்றாட்டு:

இறைவா, நீரினாலும் ஆவியினாலும் புதுப்பிறப்புகளாக மாறிய நாங்கள் இயேசுவைப் புத்துணர்வோடு பின்செல்ல அருள்தாரும்.